தினமணி

புதன்கிழமை, 20 ஆகஸ்ட், 2008

# வானொலி ஊழியர்கள் கூட்டமைப்பு கூட்டம்

புதுச்சேரி, ஆக. 19: புதுச்சேரி தொலைக்காட்சி நிலைய வளாகத்தில் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊழியர்களின் தேசிய கூட்டமைப்பு கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் செயலர் ஆர்.ஜெயச்சந்திரன் வரவேற்றார். நிர்வாகி ரமேஷ்பாபு தலைமை வகித்தார்.

தென்மண்டலத்தில் கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்து தேசிய கூட்டமைப்பின் தென்மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆர்.கே.அச்சண்டா விளக்கினார். தென்மண்டல செயலர் டி.விஜயகுமாரன் ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் மெத்தனப் போக்கைக் கண்டித்துப் பேசினார்.

அகில இந்திய பொதுச்செயலர் பரத்லால், செக்கரட்டரி ஜெனரல் குல்பூஷன் பாட்டியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊழியர்கள் தேசிய கூட்டமைப்பு கூட்டத்தில் பங்கேற்ற கூட்டமைப்பின் தலைவர் ஸ்ரீ குல்பூஷன் பகாதியா (இடமிருந்து 2-வது). உடன் (இடமிருந்து) அச்சங்கத்தின் பொதுச் செயலர் ஸ்ரீ பரத்லால், தென்மண்டல ஒருகிணைப்பாளர் ஆர்.கே.அச்சண்டா, தென்மண்டல செயலர் டி.விஜயகுமரன்.

DINAMANI - PONDICHERY - 20-08-08

DINAKARAN - PONDICHERY - 20-08-08

*தினகரன்
புதுச்சேரி 20 ஆகஸ்ட் 2008

## கோரிக்கைகளை வலியுறுத்தி

# தொலைக்காட்சி- வானொலி ஊழியர்கள் கூட்டம்

புதுச்சேரி, ஆக. 20: புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள தொலைகாட்சி நிலைய வளாகத்தில் வானொலி மற்றும் தொலைகாட்சி ஊழியர்களின் தேசிய கூட்டமைப்பு சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டம் நடந்தது. கூட்டமைப்பின் ரமேஷ் பாபு தலைமை தாங்கினார். செயலாளர் ஜெயசந்திரன் வரவேற்றார்.

வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊழியர்கள் தேசிய கூட்டமைப்பின் தென் மண்டல ஒருங்கிணைப்பாளர் அச்சண்டா கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்து பேசினார். செயலாளர் விஜயகுமரன் அதிகாரிகளின் செயல்களை கண்டித்து அதிலிருந்து மீண்டு சாதனைகள் புரிவது குறித்து விளக்கவுரை ஆற்றினார்.

அகில இந்திய தேசிய பொது செயலாளர் பரத்லால் டில்லியில் அமைச்சர்கள், துறை செயலாளர்கள், உயர் அதிகாரிகளுடன் நடந்த பேச்சுவார்த்தை பற்றி பேசினார். வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊழியர்களுக்கான அரசின் மருத்துவ உதவி திட்டம், ஊழியர் குடியிருப்பு உள்ளிட்ட வசதிகள் தொடர்ந்து கிடைப்பதற்கான நடவடிக்கை பற்றி செகரட்டரி ஜெனரல் குல்பூஷன் பேசினார்.

கூட்டத்தில் ஆறாவது சம்பள கமிஷன் பயன்கள் பற்றியும் அதில் ஏதாவது குளறுபடிகள் இருந்தால் தொடர்ந்து போராடுவது என்று ஊழியர்களிடேயே வலியுறுத்தப்பட்டது. கூட்டமைப்பை சேர்ந்த மலையப்பன், அஜீஸ்தாஸ், ராமசுப்பிரமணியன், பன்னீர்செல்வம் ஆகியோர் பேசினர்.

கூட்டமைப்பின் புதுச்சேரி ஒருங்கிணைப்பாளர் அருள்மொழிச் செல்வன் நன்றி கூறினார்.




புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள தொலைகாட்சி நிலைய வளாகத்தில் வானொலி மற்றும் தொலைகாட்சி ஊழியர்களின் தேசிய கூட்டமைப்பு சார்பில் நடந்த கூட்டத்தில் கூட்...